தயாராக இருக்கிறது. அது ஜகந்நாதனாக இருந்தாலும் சரி அல்லது சாதாரண கட்சிகளைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி, யாராக இருந்தாலும் சரி, அவர்கள் அதை எடுத்துச் சொன்னால் திருத்திக்கொள்ள நாங்கள் தயாராக இருக்கிறோம். அதைத் தான் நான் நேற்றைக்கும் அறிவித்தேன். இன்றைக்கும் அதைத்தான் அறிவிக்கின்றேன். நேற்றே இங்கு அறிவித்ததைப்போல, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள இன்றைய தினம் ஜகந்நாதனைச் சந்திக்கச் சென்று இருக்கிறார்கள். காலையிலேகூட தொலைபேசியிலே தொடர்பு கொண்டு பேசினேன்.

அவர்கள் இன்றைக்கு அவரிடத்திலே சென்று இந்த விளக்கங்களைத் தர இருக்கிறார்கள். அங்குள்ள வேறு சர்வோதய இயக்கத்தைச் சேர்ந்த நண்பர்களும்கூட இந்த விளக்கங்களை நண்பர் ஜகந்நாதனுக்குத் தருவதற்காகச் சென்று இருப்பதாக நான் கேள்விப்பட்டேன். எனவே, நல்லபடியாக அது முடியும் என்று நான் நம்புகிறேன. உரியவர்களுக்குப் போகாமல் ஏதோ குழப்பம் நடைபெறுவதாக எதிர்கட்சித் தலைவர் இங்கே எடுத்துச் சொன்னார். அப்படி ஒன்றும் இல்லை. யாரோ ஒரு காலத்திலே உரியவர்களாக இருந்தார்கள். அது இப்போது உரியவர்களுக்குப் போகின்ற காலம்தான் ஏற்பட்டு இருக்கின்றது. அப்படிப் போகும்போது ஏதாவது தவறு இருக்குமேயானால் சுட்டிக்காட்டப்பட்டால் திருத்திக் கொள்ள அரசு தயாராக இருக்கிறது என்பதைக் கூறி நான் உங்கள் அத்தனை பேருடைய சார்பாகவும், வயதான நண்பர், முதியவர் ஜகந்நாதன் அவர்கள் தன்னுடைய உண்ணாநோன்பினைக் கைவிடவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

(இ) வேதாரண்யம் பகுதியைச் சேர்ந்த இரு இளைஞர்கள் யாழ்ப்பாணத்தில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளது குறித்தும், இறந்தவர்களுடைய குடும்பங்களுக்கு நிவாரணம் அளிக்கவேண்டியதன் அவசியம் குறித்தும்.

11-10 மணி

திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய அறையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடலுக்குச் சென்றவர்கள் கொல்லப்பட்டுவிட்டார்கள் என்று அந்தச் செய்தியைச் சொல்வதாகவும் அதற்கு விளக்கம் அளிக்கவேண்டும் என்றும் கேட்டார்கள். ஆனால் இப்போது அதை விட்டுவிட்டு வேறு கருத்துக்குச் செல்கின்ற காரணத்தால் அதற்கு நான் பதில் சொல்ல வேண்டியவனாக ஆகிவிடுவேன், பிறகு விவாத மேடையாக ஆகிவிடும்,

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

TRUTH ALONE TRIUMPHS

[டாக்டர் மு. கருணாநிதி] [1990 சனவரி 20

இலங்கைப் பிரச்சினையைப் பொறுத்தவரையில். எனவே, இது வரையில் அவர் பேசிய அந்த கருத்துக்களை அவைக் குறிப்பி லிருந்து எடுத்துவிட்டு புதிதாக அவர் சொல்லவேண்டியதைச் சொல்ல தாங்கள் பணிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இராஜேந்திரன் அவர்கள் பேசிய முன்பகுதியை அறவே அவைக் குறிப்பிலிருந்து நீக்கவேண்டுமென்று ஆணையிடுகிறேன். இப்போது புதிதாக அவர் தொடங்குவார்.

திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய அரசியல் இராணுவச் சூழ்நிலை களைப் புரிந்துகொள்ளாத வேதாரண்யம் பகுதி இளைஞர்கள் இருவர் கார் ஓட்டுநர் மாரியப்பன், மற்றும் அரிசன விவசாய தொழிலாளி ஆனந்தன் ஆகியோர் யாழ்பாணம் பகுதிக்கு சென்று இருந்தவேளையில் கடந்த மாதம் மிக மோசமாக காட்டுமிராண் டித்தனமாக உடல் சல்லடையாக ஆகின்ற அளவுக்கு சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் தமிழ்நாட்டுக்காரர்கள் என்று அவர்கள் பேசும் மொழி வடிவத்தைக் கொண்டே புரிந்து கொண்ட பின்னாலும் கூட இவர்களை மிக அருகில் அழைத்துச் சென்று ஒரு ஆட்டோமெட்டிக் துப்பாக்கியால் அதில் இருக்கின்ற மேகசீன் எல்லாம் காலியாகின்ற வரையில் சுட்டுத் தீர்த்து இருக்கிறார்கள். அதனால் இன்றைக்கு அந்தப் பகுதியில் மிகுந்த பதட்டம் ஏற்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர் கள் இதிலே தனது பணி முடிந்து விட்டது என்று சொல்லி யிருந்தாலும் உங்களது பணி; உங்களது சாதுர்யம்; உங்களது சாணக்கியம் அத்துணையும் எப்படி இருக்கும் என்று உலக நாடு களில் உள்ள தமிழர்கள் எல்லாம் இப்போது எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் இந்த வேளையில் நீங்கள் இலங்கைப் பிரச்சி னைக்கும் ஒரு முற்றுப் புள்ளியினை; அங்கு இருக்கும் தமிழர்கள் பிரச்சினைக்கும் ஒரு முற்றுப்புள்ளியினை வைத்து அதோடு இங்கே இடையில் கொல்லப்பட்டு இருக்கின்ற இந்த மாரியப்பன், ஆனந்தன் இவர்களுடைய குடும்பங்களுக்கு இன்றைக்கு அங்கே இருக்கின்ற வருவாய்த் துறையில் இறப்பு சான்றிதழ் கேட்டால் கூட கொடுக்க முடியாது; காரணம் அவர்கள் மாற்று மண்ணில் இறந்து இருக்கிறார்கள்; சாட்சி கிடையாது: தடயம் கிடையாது: இருக்கின்ற சர்கம்ஸ்டான்சியல் எவிடன்ஸ் வைத்து, அவர்கள் இறந்ததற்கான புகைப்படங்கள், ஆதாரங்கள் இருக்கின்றன. அவர்கள் கொளுத்தப்பட்டதற்கான சாட்சிகள் இருக்கின்றன. அதனை வைத்து தாங்கள் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து அந்த ஏழை விவசாய குடும்பங்களுக்கு ஆனந்தன் குடும்பத்திற்கும், மாரியப்பன் குடும்பத்திற்கும் நீங்கள் நிதி உதவியினை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு தங்களுடைய மேலான பதிலை எதிர்பார்க்கிறேன்.

1990 சனவரி 20]

11-15 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி ; மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, தமிழகத்திலே வேதாரண்யம் பகுதியில் இருந்து மாரியப்பன், ஆனந்தன் என்ற இரண்டு இளைஞர்கள் விவசாயக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் தமிழ் மண்ணிலே பிறந்தவர்கள், தமிழ் மண்ணைச் சேர்ந்தவர்கள் அவர்கள் இலங்கைக்குச் சென்றார்கள். எப்படி சென்றார்கள், ஏன் சென்றார்கள் என்று எல்லாம் நான் இப்போது கேட்க விரும்பவில்லை. ஆனால், யாழ்பாணத்தில் அவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. இராஜேந்திரன் அவர்கள் இங்கே சொன்னார்கள். அவர்கள் விடுதலைப் போராளிகளால் சுட்டுக்கொல்லப்பட்டு இருக்கக்கூடும் என்று காலையில் அவர்கள் என்னிடத்திலே தெரிவித்தார்கள். இப்போது விடுதலைப் போராளிகள் என்றாலே விடுதலைப்புலிகள் என்று தான் பத்திரிக்கையில் செய்திகள் போடுவது வழக்கமாகி விட்டது. இலங்கை விடுதலைப் போராளிகள் என்றால் விடுதலைப்புலிகள். விடுதலைப் புலிகள் என்றாலே எல்லோரையும் குறிக்கும் என்பது பத்திரிகைகாரர்களுக்கு ஒரு நம்பிக்கை. திரு இராஜேந்திரன் அவர்களிடத்தில் பேசும்போதுகூட அவர்கள் எல்.டி.டி.இ. அல்ல என்ற தெளிவை நான் அவரிடத்திலிருந்து பெற்று இருக்கிறேன். எனவே அவர்கள் வேறு குழுவைச் சேர்ந்தவர்கள். யார் யாழ்பாணத்தில் இப்போது முனைப்பாக இருக்கிறார்கள் என்பது நண்பர் இராஜேந்திரன் அவர்களுக்கும் தெரியும், எனக்கும் தெரியும். நான் பெயரைச் சொல்லாமலேயே ஓரளவுக்கு உண்மையைப் புரிய வைத்து இருப்பதாகவே எண்ணுகிறேன். எப்படி இருந்தாலும் கொடுமை அங்கே நடைபெற்று இருக்கிறது. அங்கே ஒரு சகோதர யுத்தம் நடைபெறுவது மட்டும் அல்ல. இங்கே இருந்து செல்லுகின்றவர்களையும் அவர்களுக்கு ஆதரவாக செல்லுகின்றவர்களையும்கூட தீர்த்துக் கட்டுகின்ற ஒரு நிலைமை அங்கே இருக்கிறது. நான் உள்ளபடியே அதற்காக வேதனைப்படுகின்றேன். இதை வெளியுறவுத் துறை அமைச்சகத்திற்கு அரசின் சார்பாக எடுத்துச் செல்லலாம் என்றால், மத்திய அரசிலே உள்ளவர்கள், யாராக இருந்தாலும் சரி சில கேள்விகளைக் கேட்பார்கள். அவர்கள் ஏன் அங்கே சென்றார்கள்; எப்படிச் சென்றார்கள் என்று கேட்பார்கள். நான் இதை மத்திய அரசினுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்ல விரும்பாமல் நம்மால் செய்ய முடிந்தது, நண்பர் ராஜேந்திரன் அவர்கள் கேட்ட நிதி உதவி ஒன்றுதான். அவர்கள் அந்த ஆதாரங்களை எனக்குத் தருவார்களேயானால், அந்த ஆதாரங்கள் அவர்கள் சொன்ன அந்தக் கருத்துக்களை மெய்ப்பிக்கும் என்றே நம்புகிறேன், இருந்தாலும் மெய்ப்பிக்கின்ற நிலையிலே அந்த ஆதாரங்கள் எனக்குத் தரப்படுமேயானால், இரண்டு குடும்பங்களுக்கும் முதலமைச்சர் நிதியிலிருந்து தலா 10 ஆயிரம் ரூபாய் நிதி வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி).